DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.35/2025

PW - 10

| | | |
|---|---|---|
| Name | : | பெரியசாமி (Lw - 11) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 22.05.2026**

நான் கடைசியாக நாமக்கல் நகர காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 30.04.2025ம் தேதி பணி ஓய்வு பெற்று தற்போது எருமப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் 2021 முதல் 2022ம் ஆண்டுவரை எருமப்பட்டி காவல்நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தேன்.

எருமப்பட்டி காவல்நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.கருணாநிதி என்பவர் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்தபோது கடந்த 13.02.2021ம் தேதி மதியம் சுமார் 13.30 மணியளவில் நாமக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற பூங்கொடி என்பவரது அடிதடி தகவலை பெற்று நாமக்கல் அரசு மருத்துவமனை சென்று புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் நிலையம் வந்து நிலைய குற்ற எண்.158/2021 இதச சட்ட பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையின் அசலை புகார் வாக்குமூலத்துடன் கனம் நீதிமன்றத்திற்கும் ஒரு நகலை உரிய அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்துவிட்டு ஒரு நகலை காவல் உதவி ஆய்வாளர் திரு.சேகர் அவர்களின் பார்வைக்கு புலன் விசாரணைக்காக வைத்தார்.

மேற்படி வழக்கை காவல் உதவி ஆய்வாளர் திரு.சேகர் அவரது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 13.02.2021ம் தேதி மாலை 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ராஜேந்திரன், ராமராசு ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார். பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தில் இருந்து சம்பவத்திற்கு பயன்படுத்திய மண்வெட்டி ஒன்றினை கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினார். **(**கைப்பற்றுதல் மகஜர் அ**.**சா**.**ஆ**.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** பின்பு கைப்பற்றப்பட்ட மண்வெட்டியை படிவம் 91ன் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தார். பின்னர் சாட்சிகள் பூங்கொடி, விசித்திரா, பச்சமுத்து, ராமசாமி, முத்தம்மாள், ராஜேந்திரன், ராமராசு ஆகியோர்களை விசாரித்து தனிதனியாக வாக்குமூலம் பதிவு செய்தார்.

பின்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.சேகர் பணிமாறுதல் காரணமாக வழக்கு கோப்புகளை தொடர் புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்தார். வழக்கினை நான் தொடர்புலன் விசாரணைக்கு நான் எடுத்துக்கொண்டு கடந்த 16.07.2021ம் தேதி வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சரவணன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துபதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பெற்றேன். பின்பு இவ்வழக்கில் முதல்கட்ட புலன் விசாரணை செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.சேகர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இறுதியாக எனது புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீது இதச சட்ட பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் வாதிக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்தபோது சம்பவத்திற்கு பயன்படுத்தியதாக சொல்லப்படும் ஆயுதத்தை காட்டி விசாரிக்கவில்லை என்றால் சரிதான். வாதி எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தார் போன்ற விபரங்களை வாங்கி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதியின் மகளுக்கும் முதலாம் எதிரிக்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் விவாகரத்து சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக ஆஜர் எதிரிகளும் வாதியின் மீது புகார் அளித்தது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கின் கண்ணுறு சாட்சிகள் யாரையும் நான் தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

முன்விரோதம் காரணமாக வாதி கொடுத்த பொய்யான புகாரின் பேரில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது பொய்யாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>**:** இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**